# மாதர் போதினி

No. 277 பெப்ருவரி 1921 No. 2

17 FEB 1921 MADRAS

## THE SECRET OF TRUE CHRISTIAN LIFE

## உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியம்

இயேசுகிறிஸ்துவானவர் பூமியில் அவதரித்த நோக்கம் மனுஷருடைய பாவங்களை மன்னிப்பது மாத்திரமல்ல மனுஷரை பாவத்தினின்று இரட்சிப்பதுமே. பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார். அநேகர் இயேசுவானவர் பாவத்தை மன்னிக்கிறார், என் பாவங்களை மன்னித்திருக்கிறார் என்ற சந்தோஷத்தோடே திருப்தியடைந்து, கிறிஸ்து பாவ சுபாவத்தினின்று நீங்கும்படி செய்கிற வல்லமையை அடையாது திரும்பத் திரும்ப பாவஞ்செய்து மறுபடியும் மறுபடியும் மன்னிப்புக்காக ஜெபித்து மன்னிப்புப் பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தேவன் நம்மைப் பரிசுத்தத்திற்கென்று அழைத்திருக்கிறார். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இரட்சிப்பு என்ற பதத்திற்கு, செய்த பாவத்தின் மன்னிப்பென்ற அர்த்தம் மாத்திரமன்றி பாவத்தினின்று விடுதலையென்ற அர்த்தமும் சேர்ந்தது.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவஞ்செய்த ஆத்துமா சாகும். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனைச் சந்திக்கமுடியாது. தேவனைச் சந்திக்க நாம் செய்யவேண்டிய ஆயத்தம் பரிசுத்தமே. ஆதலின் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டபோதிலும் பரிசுத்தமாக்கப்படாவிட்டால் தேவனைச் சந்திக்கமுடியாது. இயேசுவானவர் சிலுவை மரணமடைந்ததால் நமது பாவங்களை மன்னிக்கவும், உயிர்த்தெழுந்ததால் பாவ வல்லமையினின்று நம்மை விடுவித்து புது ஜீவனைக் கொடுக்கவும் கூடியவராயிருக்கிறார். நாம் அவருடைய பாடுகளின் ஐக்யத்தையும் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அடையவேண்டும். இயேசுவானவர் என் பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசித்தவுடன், அதாவது இச்சத்தியத்தை நம்பினவுடன் பாவமன்னிப்பு

கிடைக்கிறது. கிறிஸ்து இருதயத்திற்குள் வந்தவுடன் பாவத்தினின்று விடுதலை கிடைக்கிறது.

பாவத்தினின்று மனந்திரும்புதலில் இரண்டு பாகமுண்டு. ஒன்று செய்த பாவத்திற்காக துக்கப்பட்டு மன்னிப்பை விரும்புதல், இன்னொன்று பாவவழியைவிட்டு ஜீவவழியில் நடக்க ஒப்புக்கொடுத்தல். இந்த இரண்டு பாகமான மனந்திரும்புதலும் சேர்ந்தே பூரண மனந்திரும்புதலாகும். சாதாரணமாய்க் கிறிஸ்தவர்களிடம் காணப்படும் மனந்திரும்புதல் முதல்பாகம் மாத்திரம்தான். இவர்கள் பாவத்தினின்று விடுதலையடைந்தவரல்லர். திரும்பத் திரும்ப பாவஞ்செய்து மறுபடியும் மறுபடியும் எங்களுக்கு சுகமேயில்லையென்று பாவ அறிக்கைசெய்து மன்னிப்புப் பெறவேண்டியவர்களுக்கு எந்த நேரத்திலும் தேவனைச் சந்திக்க ஆயத்தமிராது. சடுதி மரணத்திற்கு அஞ்சுவார்கள். கிறிஸ்து என்னை பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறாரென்று சாட்சி சொல்லக்கூடாதவர்களாவர். இவர்களுக்கு நிலையான சந்தோஷங் கிடையாது.

இரண்டாவது பாகத்தைச் செய்தவர்கள் பரிசுத்த ஜீவியத்திற்காக தங்கள் ஆவி ஆத்துமா சரீரம் தங்களுக்குள்ள யாவற்றையும் ஒப்புக்கொடுத்து கிறிஸ்து உள்ளே வந்து வாசஞ்செய்யும்படி எல்லாவற்றையும் விட்டவர்கள். அவர்கள் இருதயத்தில் கிறிஸ்துவுக்குத்தான் இடமுண்டு. உலகமும் அதிலுள்ள யாவும் அவர்களுக்குக் குப்பையாய்த் தோன்றும். உலகத்திலிருந்தாலும் உலகத்திற்குரியவர்களாயிராதிருப்பார்கள். கிறிஸ்து அவர்களிலிருப்பதால் சரீரமானது பாவத்துக்கு செத்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும். முதல்பாகம் மனந்திரும்புதலை யடைந்து இரண்டாவது பாகத்தையும் அடையாதிருப்பதால்தான் பாவசுபாவம் மாறாமல் பாவத்தின்மேல் ஜெயங்கிடையாதிருக்கும். கிறிஸ்து இருதயத்தில் வாசமாயிருக்கப்பெற்றவர்களே கிறிஸ்தவர்கள். பாவம் மன்னிக்கப்பட்டதென்று விசுவாசித்து புதுஜீவனை யடையும்படி பரிசுத்தாவியானவரைப் பெறவேண்டும். ஆவியானவரே கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்கிறதைப்பற்றி சாட்சியிடுகிறவர். பழைய மனுஷனை பாவம் சாகுமுன் புதுமனுஷனாகிய கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்ய முடியாது. ஆதலின் மாமிசமும் அதின் ஆசை இச்சையும் சிலுவையிலறையப்படவேண்டும். இரண்டாம் பாகமான பூரண மனந்திரும்புதலுண்டானால் முன்செய்த பாவங்களை நினையாமல் பரிசுத்த ஜீவியத்தையே நோக்கி எல்லாவற்றிலும் ஓயா ஸ்தோத்திரமிருக்கும். கிறிஸ்து வாசஞ்செய்யும்போது 'நான்' அல்லது பாவம் ஒழிந்து பரிசுத்த ஜீவியமுண்டாகும். கிறிஸ்துவின் வாசனை எல்லாவிதத்திலும்

வெளிப்படும். கிறிஸ்து வாசம்பண்ணுவதைப் பரிசுத்த ஆவியினால் நாமே அறிவதுமன்றி பிறரும் அறிந்துகொள்வார்கள். இவ்வித பரிசுத்த ஜீவியத்தின் இரகசியம் கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்வதேயாம். 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.'

## SUMMER SCHOOL AT ENNORE

## என்னூரில் கூடின ஞானோதய வித்தியாசாலை

கடந்த ஜனுவரி மாதம் 13-ம் தேதிமுதல் 16-ம் தேதிவரை சென்னைக்கருகிலுள்ள என்னூரில் சுமார் 80 பேர் சேர்ந்த ஞானோதய வித்தியாசாலை கூடினது. இச்சாலையில் சேர்ந்தவர் சுவிசேஷ ஊழியத்திற்குத் தங்களை ஒப்புவித்தவர்கள். இவர்கள் அங்கு கூடின நோக்கமென்னவென்றால், பற்பல மிஷனிலுமுள்ள சுவிசேஷ ஊழியஞ்செய்யுங் கிறிஸ்தவப் பெண்கள் கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டு பரிசுத்தாவியானவரின் வல்லமையை அடைந்து தைரியத்தோடும் ஊக்கத்தோடும் வல்லமையோடும் கிறிஸ்துவைப்பற்றி சாட்சிகூறிப் பிரசங்கிக்கும் கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே.

வந்தவர் அநேகர் விசேஷ பலனடைந்ததாக சாட்சியிட்டுப் போயினர். காலைதோறும் வேத ஆராய்ச்சிக் கூட்டங்கள் எழு பிரிவாக (Bible circles) நடந்தேறின. அவற்றில் அப்போஸ்தலர் நடபடிகள் 1–17 அதிகாரங்களை விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவியானவர், சாட்சிப் பிரசங்கம் என்ற நான்கு பிரிவாகப் பிரித்துக் கற்றுக்கொள்ளச் சமயமிருந்தது. இதற்குப்பின் சுவிசேஷப் படை முயற்சி, ஓய்வுநாட் பள்ளிக்கூடம், ஊழியந்தெரிந்துகொள்ளுதல் என்ற விஷயங்களின்மேல் சம்பாஷணைகள் முறையே முதல் மூன்று நாட்களில் நடந்தேறின. பிற்பகலில் விண்ணப்பக் கூட்டமும் கிராமப் பிரசங்கமும் ஸ்தோத்திரக்கூட்டமும் நடந்தன. மாலை $6\frac{1}{2}$ மணிதோறும் சகரியா தீர்க்கதரிசனத்தினின்று கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கும் ஐசுவரியத்தைப்பற்றி 'அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்' என்ற வாக்கியத்தை விளக்கும் ஆதாரமாகக்கொண்டு தொடர்ந்தேர்ச்சியாய் நாலு நாட்களிலும் பக்தி தியானப் பிரசங்கமும் ஐக்கிய ஜெபமும் செய்யப்பட்டன. ஞாயிற்றுக்கிழமையன்று விசேஷ ஆராதனையும் நடந்தேறியது.

சரீர இளைப்பாறுதலுக்கென்றும் உற்சாகத்துக்கென்றும் தினந் தோறும் பகல் 1½ மணிமுதல் 2½ மணிவரை இளைப்பாறும் நேரமும் சாயங்காலம் 5½ மணிமுதல் 6½ மணிவரை வெளியில் போய் உலாவும் நேரமும் குறிக்கப்பட்டிருந்தன. அமைதியான தனித்த இடமாய்க் கடலோரத்திலிருந்ததால் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் ஆறுதலும் அமைதலுமிருந்தது. கடற்கரையோரமாய் மீன் பிடிப்போரைச் சந்தித்ததும் பேசினதும் உலாவினதும் அருமை இரட்சகருடைய கலிலேயாக் கடலோரமான ஜீவியத்தை அடிக்கடி ஞாபகத்தில் கொண்டுவந்து சந்தோஷிப்பித்தது.

ஞானோதய வித்தியாசாலையைச் சேர்ந்தவர் ஸ்தோத்திரத்தோடும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவேண்டுமென்ற ஆவலோடும், உற்சாகத்தோடும், புதுஜீவன் சாட்சியாயிருக்கவேண்டுமென்ற வாஞ்சையோடும் போயிருக்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் இன்னொரு முறை ஞானோதய வித்தியாசாலை கூடும்போது இந்த முறை வந்தவர்கள் அநேகரைப் புதிதாய் அழைத்துவருவார்களென்று நம்புகிறோம். இந்த முறை வரக்கூடாதுபோனவர்களும், ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் சுவிசேஷப் படைமுயற்சி வேலைக்கென்று பிரதிஷ்டைபண்ணி உழைத்துவருவார்களாக.

## THE NEW YEAR—1921

## புது வருஷம்—1921

புதிதென்றால் எவர்க்கும் பிரியம். புதுப்புஸ்தகம் ஒரு பையனுக்குக் கிடைக்கட்டும், அவனுக்குண்டாகும் சந்தோஷத்துக்கு மட்டுண்டா? புதுச்சேலை, புது நகை ஒரு பெண்ணுக்குக் கிடைக்கட்டும், அதன் உல்லாசத்தை மதிக்க முடியுமா? அப்படியே நமக்கு 1921 ஆகிய ஓர் புது வருஷத்தை ஆண்டவர் அருளியிருக்கும்போது நம்மெல்லாருக்கும் விசேஷ கொண்டாட்டமுண்டாவது இயல்புதானே. இப்புதுவருஷத்தில் ஒவ்வொருவரும் அடைந்து கொள்ளவேண்டிய சில புது விஷயங்களை உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

1. இப்புதுவருஷத்தில் உனக்கு ஓர் புதுப்பெயர் வேண்டும். ஏசா. 62 : 2. ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு ஒரு புதுப்பேர் கொடுக்கிறதாகச் சொல்லியிருக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தாலாட்டும்போது,

'கண்ணே என் கண்மணியே, கானகத்துப் பைங்கிளியே
பொன்னே என் பொன்மணியே, பூமரத்து வண்டினமே
தேனே திரவியமே, திகட்டாத தெள்ளமுதே
மானே மரகதமே, மல்லிகையே மருக்கொழுந்தே'

என்று என்னென்ன பேரெல்லாம் சொல்லி அழைக்கிறார்கள். ஆண்டவரும் உன்பேரிலுள்ள அளவற்ற பட்சத்தினால் உனக்கு ஓர் சிங்காரமான பேர்வைத்துக் கூப்பிட விரும்புகிறார். நீ அவருக்குப் பிரியமாக நடந்துகொண்டால் அப்பெயரைப் பெற்றுக்கொள்வாய்.

2. இப்புதுவருஷத்தில் நீ புதிதான கிருபைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இரட்சகர் காலைதோறும் உனக்குப் புதிதான இரக்கங்களை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். புலம். 3 : 23. அவருக்குப் பஞ்சமா? நமக்குத்தான் பஞ்சம். வானமும் பூமியும் அவைகளின் நிறைவும் அவருடையதே. ஆகையால் உனக்கும், உன் ஆத்துமாவுக்கும், உன் வீட்டாருக்கும், மற்றவர்களுக்கும் வேண்டிய சகல புதிய நன்மைகளையும் அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்.

3. இப்புது வருஷத்தில் நீ ஆண்டவரோடு புதிய உடன் படிக்கை செய்யவேண்டும். அவர் தமது இரத்தத்தினிமித்தம் உன் பாவத்தை மன்னிக்கிறேனென்று உன்னுடன் புதிய உடன்படிக்கை செய்கிறார். மத். 26 : 28. ஆகையால் நீ சொல்லவேண்டியதாவது, நான் உம்முடையவன், நீர் என்னுடையவர்; உம்மை நீர் எனக்குத் தத்தம்பண்ணினீர், என்னை நான் உமக்குத் தத்தம்பண்ணுவேன்; எனக்காக இரத்தம் சிந்தினீர், நான் உமக்காக இரத்தம் சிந்துவேன்; என்னை நேசித்தீர், நான் உம்மை நேசிப்பேன் என்று நீ அவருடன் புது உடன்படிக்கை செய். தாமதமின்றி இன்றே, இப்பொழுதே செய்.

4. இப்புதுவருஷத்தில் உனக்குப் புது இருதயம் வேண்டும். எசேக். 36 : 26. நமது இருதயம் பாவத்தால் மெத்தவோ கறைப் பட்டுப்போயிருக்கிறது. அது உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் நொதிக்கிற இரணமாயும், அதின் நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததாயுமிருக்கிறது. ஆகையால் இப் புதுவருஷத்தில் ஆண்டவரிடம் போய் அழுது கண்ணீர் சொரிந்து, புது இருதயத்துக்காக வேண்டிக்கொள், அப்போது அவர் உனக்கு அழகுள்ள திவ்விய வாசனை பொருந்திய புது இருதய கமலத்தைக் கடாக்ஷிப்பார். நீ இருக்குமிடமும் நடக்கும் பாதையும் பரிமளம் பொருந்தியிருக்கும்.

5. இப்புதுவருஷத்தில் நீ ஓர் புதிய கட்டளையைக் கைக் கொள்ளவேண்டும். யோவா. 13 : 34. வந்த சண்டையை விடாதே

தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல், ஒன்று சொன்னால் இரண்டு சொல் என்பது உலகத்தார் போதனை. தெய்வ மைந்தனாகிய இயேசுவோ, நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிறார். ஓர் வயோதிப கிறிஸ்தவ கவிஞன் தன் குருவினிடம் வந்து 'என் மகன் செத்த அன்றுதான் நான் அவனுடன் பேசினேன்' என்றான். தகப்பனும் மகனும் ஒரே ஊர், மகனும் பெரிய குடும்பஸ்தன். இருவருக்கும் தகப்பன் பிள்ளை என்கிற பாந்தம் போய், ஒருவருக்கொருவர் பிராண சத்துருக்களாகி பேச்சு வார்த்தையே கிடையாது. இருந்தாற்போல் மகன் செத்துப்போனான். அன்றுதான் தகப்பன் போய், இறந்துபோன மகன்மேல் விழுந்து அப்பா, அப்பா என்று கூப்பிட்டான். இறந்தவன் பேசப்போகிறானா? மகன் உயிரோடிருக்கும் போதே தகப்பனும் மகனும் கிட்டக் கிட்ட உட்கார்ந்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, சம்பாஷித்துக்கொண்டிருந்தால் அது என்ன ஆனந்தமாயிருக்கும்! சகோதரனே, சகோதரியே, நீ பேசாத யாருமுண்டா? அப்படியானால் இன்றே போய் பேசி சமாதானமாகு, உன் நேசபாசத்தைத் தெரியக்காட்டு.

6. இப்புதுவருஷத்தில் நீ உன் மீட்பருக்கு ஓர் புதுப்பாட்டுப் பாடவேண்டும். சங். 96 : 1. ஆண்டவர் உனக்குத் தினம் தினம் எத்தனைப் புது ஈவுகளை அருளுகிறார். உனக்குப் புதிய காரியங்கள் மேல் எப்படி ஆசையுண்டோ அப்படியே உன் இரட்சகருக்கும் ஆசையிராதா? உன் பிள்ளை அன்றைக்குப் புதிதுபுதிதாக வாயைத் திறந்து அம்மா சோச்சி என்றபோது, நீ உன் பிள்ளையைக் கட்டித் தழுவி, கண்ணே கரும்பே என்று திரும்பத்திரும்ப முத்தமிட்டாயே. அப்படியே ஆண்டவரும் நீ உன் வாயைத் திறந்து பாடும் புதுப்பாட்டுகளையும், செய்யும் புதுப் பிரசங்கங்களையும் கேட்டு ஆனந்தங்கொள்ளமாட்டாரா? "வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்."

Rev. Y. J. Taylor.

## HIS EXCELLENCY LORD WILLINGDON'S SPEECH

## மேன்மைதங்கிய கவர்னர் வில்லிங்டன் பிரபுவின் வார்த்தைகள்

பம்பாயில் நான் கவர்னராயிருக்கையிலேயே, கனம் காந்தி என்பவரைப்பற்றியும், அவருடைய நடவடிக்கைகளைப்பற்றியும், எனக்கு சற்று தெரியும். ராஜ்ஜியத்தின் நன்மையை உத்தேசித்தே, அவர் மனப்பூர்வமாய் காரியம் செய்வதாய்ச் சொல்வது ஒன்றும், அவர் நினைத்து நடத்துவதுபோல, ஒருவித நன்மையை

யும் இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவிற்கு உண்டாக்காது என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். இச்சமயத்தில் காந்திபோல ஒருவர், இந்தியாவில் தப்புவழியில் இறங்கி, மாறுபாடாயும் எட்டிக்குப் போட்டியாயும் செய்யும் காரியங்களும், பிரசுரங்களும் இந்தியாவின் தௌர்ப்பாக்கியத்திற்குக் காரணம் என்பதே, என் தீர்மானம். அந்த காந்தி கிளப்பிவிட்ட 'ஸத்தியாக்கிருகம்' என்பது ராஜ்ஜியத்திற்கு எவ்வளவு தீங்கு இழைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா! அவரே இப்பொழுது 'ஒற்று உழையாமை' என்பதைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

இதினாலே, ராஜ்ஜியத்திற்கு அநர்த்தம் உண்டாகாமல் இருக்க வேண்டுமென்பது எனது விசாரம். அவருக்கு ஜனங்களை ஆக்கிரோசப்படுத்திவிடத் தெரிவதுபோல, அவர்களை சமாசப்படுத்தி ஆக்கிரோசத்தை அடக்கச் சக்தி இராமலும் இருக்கிறது. இதை எல்லாம் அவர் முன்னமே தீர்க்காலோசித்துப் பார்த்து, ராஜ்ஜியத்தில் அவர் குழப்பம் உண்டாக்காதிருக்கவேண்டும். அது போகட்டும். அவர் செய்த பிரசாரத்தால் இந்தியாவிற்கு என்னதான் கைமேல் பலன் கிடைத்திருக்கிறது? வட இந்தியாவிலே, ஜனங்கள் ஆயிரக்கணக்காய் இவர் பிரசாரத்தைக் கேட்டு, அதற்குள்ளாகி, அனுபவிக்கும் கஷ்டநிஷ்டூரம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாமல் இருக்கிறது!! ஜனங்களுக்கு நன்மைபுரிந்து, ஜனங்களுடைய நன்மையே நாடி, ஜனங்களாலே நன்குமதித்து பாராட்டப்பெற்ற ஒரு ஆங்கில உத்தியோகஸ்தர் அநியாயமாய் அபாண்டமாய்க் கொல்லப்பட்டிருப்பதையும் நீங்கள் அறியீர்களோ!!!

ஆகவே, தற்சமயம் நாம் இன்னது செய்வது உசிதம், இன்னது அநுசிதம் என்பதைக் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. ஸர்க்காரோடு மனம் ஒத்து ராஜ்ஜியம் நடைபெறச்செய்தல் யுக்தமா? அல்லது ஸர்க்காரோடு விரோதப்பட்டு, ஒத்து இயங்காமல் இருத்தலா யுக்தம்? என்பதை தீர்மானப்படுத்திக்கொள்ளவேண்டும். ஜனங்கள் சட்ட பூர்வமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ராஜ்ஜியபரிபாலனத்தை அவலம்பித்து, ராஜ்ஜியத்தை முன்னுக்குக் கொண்டுவருவது சிரேஷ்டமா? அல்லது ராஜ்ஜியாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒழுங்கு மீறி, ராஜ்ஜியத்தைச் சின்னபின்னப் படுத்தும்படிக்குள்ள பிரசாரங்களை ஆதரித்து, ராஜத்துரோகிகளாய் இருப்பது சிரேஷ்டமா? என்பதை விஸ்தாரப்படுத்தவேண்டும். இது அல்ப சொல்பமான காரியம் என்று நினைக்கக்கூடாது. பஞ்சாபில் நடந்த கலகங்களினாலே, ராஜ்ஜியத்திற்கு சம்பவித்த அநர்த்தம் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியாதா? அவ்வநர்த்தம்

களைப்பற்றி இந்தியர்களுக்கு உண்டாயிருக்கும் அபிப்பிராயம் இன்னது என்று எனக்குத் தெரிந்திருக்கிறது! எனது தேசத்தவராகிய இங்கிலீஷ்காரரும் அவ்வனர்த்தங்களைப் பார்த்து அவர்களுக்கு உண்டாகிய மனக்கிலேசம் இன்னது என்பதையும் ஒவ்வொரு இந்திய புருஷனும் மனதில் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். எதாகிலும் ராஜ்ஜிய பரிபாலனத்தில் குற்றம் குறைகள் நடந்துவிட்டால், அவைகளை சட்டவிரோதமின்றி, ஒழுங்குபடத் திருத்திவைக்க வேண்டுவது அவசியம் என்பது உங்களுக்குத் தெரிந்திராத விஷயமல்ல. 'ஒற்று உழையாமை' என்பதை ஜனங்கள் மேற்கோளாகக் கொண்டபிறகு, மேலே சொல்லியபடி பஞ்சாபில் நடந்த கலகம் ஒரு காரணமாம். இதைத் தவிர வேறு ஒரு காரணமும் உண்டு. அதாவது, 'துருக்கியரோடு செய்த உடன்படிக்கை.' இந்த இரண்டையுமே ஒற்றுழையாமைக்குக் காரணங்கள் என்கின்றனர். துருக்கியர், பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு விரோதமாய் சண்டை செய்யத் தலைப்பட்டு, அகோர யுத்தம் நடக்கும்போதும்கூட, இந்தியாவிலுள்ள முஸ்ஸல்மான்கள் யாவரும், நமது சக்கிரவர்த்தியார் பக்கமே இருந்து, நமது பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு இடைவிடாமல் புரிந்திருக்கப்பட்ட நன்மையை ஒருநாளும் மறக்கற்பாலதன்று. அவர் செய்த உதவியும் அதிசயிக்கத்தக்கது. அவர்களுக்கு உள்ள அந்தரங்க விசுவாஸமும் பக்தியும் ஒருவருக்கும் தெரியாததல்ல. துருக்கியர், பிரிட்டிஷாருக்கு விரோதமாய்ப் போர்புரியும் காலத்து, அவர் மதத்தினரைச் சேர்ந்த இந்தியாவிலுள்ள முஸ்ஸல்மான்களுக்கு உண்டாயிருக்கும் மனக்கிலேசத்தைப் பார்த்து, எனக்கு அவர்களிடமுள்ள ஆதங்கம் அதிகம் என்பதையும் அடிக்கடி வெளிக்காட்டியிருக்கிறேன். இப்படியெல்லாம் இருக்க, துருக்கியர் அபஜயப்பட்டு, சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் போட்டிருப்பது, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு முஸ்ஸல்மானுக்கும் தெரியாத விஷயமல்லவே! உடன்படிக்கையின் நிபந்தனைகள் வாஸ்தவமாய், கடுமையானவை என்பதற்குத் தடையில்லை. ஆயினும், தோல்வியடைந்தவருக்கு விதிக்கவேண்டிய நிபந்தனைகளை விட அவை அதிகக் கடுமையானவை அல்ல. மேலும், காலிப்பு ஆகிய துருக்கி ஸுல்தானும் கான்ஸ்டான்டிநோபில் என்னும் நகரத்திலேதான் இருந்துவருகிறுர். துருக்கியரின் உடன்படிக்கைப்படி, முஸ்ஸல்மான்களுக்கு சிரேஷ்டமாயுள்ள புண்ணிய ஸ்தலங்கள் ஒருவித சேதப்படுத்தப்படாமல் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. துருக்கியர், இவ்வித உடன்படிக்கையை ஒப்புக்கொண்டதில், இந்தியா கவர்ன்மென்டாருக்கு ஒருவித அவகாசமும் கிடையாது. இந்திய கவர்ன்

மென்டாரைக் கேட்டு அந்நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டவைகளு மல்ல, யுத்தத்தில் ஒருங்குசேர்ந்துள்ள, ராஜாங்கத்தார் யாவரும் ஐக்கியமாயிருந்து தீர்க்காலோசனை செய்து ஏற்பட்ட நிபந்தனை களேயாகும். இப்படிக்கெல்லாம் இருக்க, துருக்கியர் கையொப்பம் போட்ட உடன்படிக்கையினாலே, இந்தியாவில் கலகம் உண்டாக்கி விடுவது எதற்காக? அவ்வுடன்படிக்கையை இந்திய கவர்ன்மென் டார் மாற்றி, துருக்கி ராஜ்ஜியத்தை, யுத்தத்திற்கு முன்னிருந்த பதவிக்குக் கொண்டுவைத்தல் எப்படி முடியக்கூடிய காரியம்? ஆகையினாலே, துருக்கியர் செய்த உடன்படிக்கையானது இந்தியா வில் 'ஒற்றுமையாமை' என்பதை பிரசாரப்படுத்தி இந்தியாவை கோலாகலப்படுத்த எங்ஙனம் நியாயமாகும்?

ஆகவே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, நீங்கள் மன தைத் திடப்படுத்திக்கொள்ளுவது வெகு பிரமாதமான காரியம் இல்லையா? இந்த ராஜதானியில் உள்ள மகா ஜனங்கள் இது சரி, இது தப்பு என்று அறிந்து நடக்கக்கூடிய நல்ல ஞானம் உடையவர் கள் என்றும், அவர்களுக்கு ஆங்கில அரசாக்ஷியில் ஆழ்ந்த பக்தி யும், ராஜவிசுவாஸமுமுண்டு என்றும், ராஜ்ஜியவிரோதமாயும் சட் டத்திற்குப் பிரதிகூலமாயுமுள்ள ஒரு காரியமும் செய்ய அவர்கள் இடங்கொடுக்கமாட்டார்கள் என்றும், அப்படி பிரதிகூலமாயுள்ள காரியங்களுக்கு இடம் கொடுப்பதானால் ராஜ்ஜியம் முழுவதும் அல் லோலப்பட்டு, சிதைந்துபோய்விடும் என்பதை நன்கு அறிந்தும், தற்காலம் ஜனங்களுக்கு ஜவாப்பு சொல்லும் ஸ்திதியில் ஏற்படுத் தப்பட்டிருக்கும் நூதனச் சீர்திருத்தங்களை முதல் முதலில் சரியான படி அனுஷ்டானத்திற்குக் கொணர்ந்து, அவைகளை சீர்பெற நடத்தி வைக்க ஸர்க்காருடன் ஜனங்கள் மனம் ஒத்து முயல்வார்கள் என்றும் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

நம் இருவகுப்பினர்க்குள்ளும் வரவர ஜாஸ்தி ஒற்றுமை ஏற்பட் டால்தான நாம் இப்புது அரசாக்ஷியை முன்னுக்குக் கொண்டுவர முடியும் என்று எனக்கு எப்போதும் அபிப்பிராயமுண்டு. அதில் எனக்குத் திடபக்தியும் உண்டு. யாதாயினும் ஒரு பிரிட்டிஷ்காரர் இந்தியாவிற்கு வந்து, இந்தியர்களுடைய உபசரணைகளை சிறிது காலம் இருந்து பார்க்குமிடத்து, அவருக்கு தான் எந்த வேலையில் அமர்ந்திருந்தாலும் இந்தியர்களிடம் அபிமானம் மிக்கு. இந்தியரும் தனக்கு சமானமானவர் என்றே மதிக்கலாகி, இந்தியர் மேனோக்கி வரவேண்டிய விஷயங்களில் இந்தியருக்கு தன் அபிமானத்தைக் காட்டி, அவரை உத்ஸாகப்படுத்துவதே தன் கடமையாகப் பாவிக் கும் ஸ்திதியில் இருந்துவருகின்றனர். அங்ஙனமிருக்க, இந்திய

ரும், தங்களுக்கு பிரிட்டிஷ் ராஜ்ஜியக்காரர் காட்டும் மரியாதையை யும், அன்பையும் கிரகித்து, பிரிட்டிஷ் தேசத்தவர் இந்தியா மே ஞெக்கி அபிவிர்த்தியடையும்படி, தலைமுறை தலைமுறையாய் பாடு பட்டு, தங்கள் காலத்தை இந்தியர்களின் நன்மையை உத்தேசித்தே இந்தியாவில் கழித்திருக்கின்றனர் என்றும், இந்தியர்கள், தங்கள் ராஜ்ஜிய பரிபாலனத்தில் உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் தேர்ச்சி பெற்று, ராஜ்ஜியாதி பத்தியம் தாங்களே பரித்துவரவேண்டிய எற்பாடுகள் அப்பிரிட்டிஷ் தேசத்தவர் செய்திருக்கின்றனர் என்றும் இந்தியர் மனதில் ஞாபகம் வைத்து, இந்தியாவிற்கு பெரிய பரோபகாரியாகிய கோபாலகிருஷ்ண கோக்ளே என்பவர் சொல்லி யிருக்கும் வாக்கையும் மறவாமல் எப்பொழுதும் மனதில் ஊன்றிக் கொண்டு, இங்கிலீஷ்காரருக்கும் இந்தியருக்கும் பரஸ்பரம் அந்நி யோந்நிய பாவம் மேலிடுமாயின், இந்தியாவிற்கு இனிமேல் ஒருவித இடஞ்சலும் எற்படாது என்று நான் விசாரப்படாமலிருப்பேன். இந்த கோபாலகிருஷ்ண கோக்ளே என்ற மகானிடம் எனக்கு எப்பொழுதும் பேரன்பு உண்டு. அவர் எனக்கு அத்தியந்தம் ஆத்ம சினேகிதர் என்று நான் உங்கள் முன்னிலையில் சொல்லிக்கொள்ளு வதே எனக்கு வெகுப்பெருமை. அக்கோக்ளே சொல்லியிருப்பதா வது, 'இந்திய ராஜ்ஜியத்தில், சமாதானம் உண்டாக்கிக் கலகமில் லாமல் காப்பாற்றினது ஆங்கில அரசாக்ஷி! சட்டமும் ஒழுங்கும் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு, இந்தியருக்கு ஐரோப்பியருக்குள்ள கல்வி சாமர்த்தியத்தைக் கற்பித்து, இந்தியர்கள் தங்கள் மனதில் உள்ளதைத் தாராளமாய் வெளியிட்டுப் பேச இந்தியாவில் இடம் உண்டாக்கியதும் ஆங்கில அரசியலே!! இந்தியர்களுக்கு இப்படி மேற்கூறிய சாதனங்களைக் கொடுத்து, இந்தியர்களும் அவைகளால் விளையும் பலனை அடைந்து ஆனந்திக்க ஆஸ்பதமும் ஆங்கில அரசே!!! ஆகவே, இந்தியாவில் இம்மாதிரியான ஸத்காரியங்கள் நடைபெறும்படிச் செய்தது ஆங்கில அரசியலின் மகிமை என்று விளங்கவில்லையா!!!' ஆகையினாலே, எனது நண்பரும், இந்தியர் அபிவிர்த்தியைப் பூர்ணமாய்க் கைக்கொண்ட இம்மகானின் வாக் கைப் பரிசீலனைசெய்து இந்தியர்கள் நடந்துவருவாராயின், இந்தி யாவிற்கு இனி க்ஷேமமேதவிர, ஒருவித பயமும் கிடையாது. ஜனங் களுக்கு தற்காலத்தில் உள்ள ஆக்கிரோசமும், அருவருப்பும், நாளடைவில் பறந்துபோய்விடும். பிரிட்டிஷ்காரரும், 'இதுகா றும் இந்தியாவை ஆண்டுவந்தது போதுமானது. இந்தியர்களுக் குத் தங்கள் ராஜ்ஜியபாரத்தை அவர்களே வகித்துவரும்படிக் கொ டுத்துவிடலாம். இந்தியர்களுக்கு உள்ள ராஜபக்தி விசுவாஸத்திற்கு

அழிவு கிடையாது. ராஜ்ஜியத்தில் கலகமின்றி, சமாதானம் மேலிட்டு, ராஜ்ஜியத்திற்கு வெளியிலிருந்து ஒருவிதத் தொல்லேயும் இங்கிலீஷ் ராஜ்ஜியாதிபத்தியத்திற்கு இந்தியா ஒரு அங்கமாகி இருப்பதினுலே ஏற்படாது' என்று கண்டறிந்து, எங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் இந்திய ராஜ்ஜியபாரம் என்னும் பெரும் கடமையை இந்தியர்கள் கையிலேயே ஒப்புவித்தல் நிச்சயமாயும் முடிந்துவிடும் என்று இப்பொழுதே உங்களுக்குப் பின்வருவதை ஊக்கமாய்ச் சொல்லுகிறேன்.

அந்தக்காலம், இப்பொழுதுதானே, அல்லது கொஞ்சம் காலம் கழித்தோ, வருவது நிச்சயமே. அந்தக்காலத்தைப் பிரதிஷ்டித்திருப்பது, நூதனச் சீர்திருத்தங்களே எங்ஙனம் இந்திய மகா ஜனங்கள் நிர்வகிப்பார்களோ அதைப் பொருத்திருக்கிறது. ராஜ்ஜிய விஷயங்களில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படுவது ஸகஜம்தான். ராஜ்ஜிய பரிபாலன விஷயமாய் கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் சமீபத்தில் உண்டாகலாம். ஒவ்வொரு கக்ஷியிலும் தலேவராயிருப்பவர், ஒருவருக்கொருவர் இருக்கும் கேவலக் குரோதகுணத்தை வெளியிடாமல் அடக்கிக்கொண்டு, தங்களுக்குள்ள அபிப்பிராயபேதத்தைப் பாராட்டாமல், ராஜ்ஜிய நன்மையை உத்தேசித்து ஒருமனப்பட்டு சிநேகபாவமாய் நடந்து, ஜனங்களிடத்தில் நல்ல அபிப்பிராயம் உண்டாக்கி, தங்களுக்குப் பஞ்சபூத ஸாக்ஷியாய்ச் சரி என்று தோன்றுவதை நிலேநாட்டி நடத்தத் தைரியம்வாய்ந்து, தங்கள் அபிப்பிராயத்தை ஜனங்கள் ஒப்புக்கொள்ளாமலிருந்தாலும் அதைப் பார்த்து மனம் தளராமலும், அதைரியப்படாமலும், ராஜ்ஜிய காரியம் முன்னேக்கி அபிவிர்த்திக்கு வரவேண்டும் என்கிற ஒரு கருத்தையே மனதில் கெட்டியாய் ஊன்றி நடந்துவருவார்களாயின், ராஜ்ஜியத்திற்கு அநுகூலம் வரும் என்பதற்குத் தடையே இல்லே. இவ்விஷயத்தை நீங்கள் நன்ருய்க் கவனித்து நடந்துவரவேண்டியது அவசியம்.

நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவது இன்னம் ஒன்று உண்டு. அதைப்பற்றி உங்களுக்கு இதற்கு முன்னுடியே ஒருதடவையில் சொல்லி இருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலும் அவ்விஷயத்தைப்பற்றிக் கூறுவது வெகு ஆவசியகம் என்று நினேத்தே அதை உங்களுக்கு இப்பொழுது தெரிவிக்கிறேன். நம்முடைய சென்னே ராஜதானி வித்தியாபிவிர்த்தியிலும், ராஜ்ஜிய பரிபாலனத்திலும் அநேகமாய் இதர ராஜதானிகளே விட, மேனேக்கியே இருந்துவருகிறது வாஸ்தவம் என்பது என் அபிப்பிராயம். ஆயினும், இவ்விராஜதானியில் ஜாதிபேதம், இதர ராஜதானிகளே விட, மிக்க

கட்டுபாடுள்ளதாயிருந்து வருகிறதற்கு ஒருவித ஆக்ஷேபனையு மில்லை. இவ்விதமாயுள்ள ஜாதி வித்தியாசத்தினாலே, ராஜ்ஜிய பரி பாலனம் மேனோக்கி விளங்க இடையூறு இனிமேல் ஏதாகிலும் உண்டாகுமோ என்கிற பெரிய சந்தேகம் மாத்திரம் என் மனதில் உண்டாகிறது. இப்படி நான் சொல்லுவதினாலே, உங்களுடைய ஜாதி மதாசாரங்களை விட்டுவிடவேண்டு மென்றாவது, அவை களை தற்காலத்திற்கு மாற்றிக்கொள்ளவேண்டு மென்றாவது நான் எண்ணிவிடுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். தலைமுறை தத்துவமாய் நீடித்துவந்திருக்கும் ஜாதிபேதங்கள் மாறிப்போவது சிரமம் என்பது எனக்குத் தெரிந்தவிஷயமே. இப்பொழுதோ, நீங்கள் இந்தியாவிலும், பிரத்தியேகமாய், இந்த ராஜதானியிலும், ராஜ்ஜிய பரிபாலனம் ஜனங்கள் கையில் இருக்கவேண்டுமென்று நீங்கள் கோறிக்கொண்டுவருகிறீர்கள். இவ்வித ராஜ்ஜிய பரிபால னத்தை, இந்திய நூதன ஆக்ட்டு, ஆரோபிக்கப்போகிறது என்பதும் உங்களுக்குத் தெரிந்தவிஷயம். ஆகவே, ராஜ்ஜியம் அபிவிர்த்திக்கு வரவேண்டிய ஊக்கத்தை நீங்கள் கிரியாம்சையில் காண்பித்து, உங்களோடு சேர்ந்து, ராஜ்ஜியாபிவிர்த்திக்குப் பாடுபடும் மனிதர், பஞ்சம ஜாதியானாலும் சரி, ஸர்வோத்கிருஷ்டமான ஜாதியானா லும் சரி, அவரை இன்ன ஜாதி வருணாசிரமத்தவர் என்று பாராமல், அவரையும் உங்களோடு சேர்ந்து ராஜ்ஜியத்திற்குப் பாடுபடுபவர் என்றே மதித்து, நீங்கள் அன்னவர்களை ஆதரிக்கவேண்டுவது அத்தி யாவசியகம் என்பதை நான் உங்களுக்கு வெகு வணக்கத்துடன் தெரிவித்து, நீங்கள் யாவரும் என் வேண்டுகோளின்படி உங்களுக் குள்ள ராஜ்ஜிய விசுவாஸத்தை மனப்பூர்வமாயக் காட்டுவீர்கள் என் றும் நம்பி இருக்கிறேன்.

## THE SECOND ADVENT OF CHRIST

## இயேசுவின் இரண்டாம் வருகையைச் சொல்லி எல்லாரையும் குணப்படுதலுக்கு ஏவுதல்

இராகம், சக்ரவாகம். மிஸ்ரதாளம்.

பல்லவி

இயேசு ரட்சகரை நீ நம்பு—இனி
வேறாரை நம்பினாற் நேருமே துன்பு.

1

காலம்வீண் போகுது பாரு—இப்போ
கருத்துடன் ஆத்தும ரட்சிப்பைக் காரு,
இதுவேநல் தருணமென் றெண்ணு—யேசு
ஏக னுரைப்பதை இன்றைக்கே எண்ணு.— இயேசு

2

நாளைக் கிருப்பதோர் மாயம்—அதை
நம்பிடில் விடிந்திடும் மெத்த அபாயம்,
கிருபையின் காலமிதோ பாரே—வெகு
அருமையாய் இரட்சகர் அழைக்கிறார் நேரே.— இயேசு

3

ஐங்காயம் அங்கத்திற் கொண்டார்—உனைப்
பங்கப்படுத்தும் பல பாவத்தைக் கொன்றார்,
பாவ மனைத்தையுந் தள்ளு—இயேசு
பாதத்தை யண்டிப் பிடித்துத் தழுவு.— இயேசு

4

ஆகாய மேலேறி வருவார்—அப்பே
பாவிக ளானபேர் பதறி அழுவார்,
தூதர்கள் பலகோடி வருவார்—பூமி
முழுதிலு முள்ளோரைக் கூட்டியே சேர்ப்பார்.— இயேசு

5

நியாயத்தீர்ப் பொன்றுமே வைப்பார்—அங்கே
நியாயா சனத்தினிற் கிறிஸ்துதான் வசிப்பார்,
மோட்சம் நரகமென்ற இரண்டு—சரியான
பதவிகள் மானிடர்க் குண்டு.— இயேசு

6

என்னபோக்கு அப்போ சொல்வாய்—பல
ஏற்காத போக்குகள் யாதொன்றும் செல்லா,
பெரியோர்கள் சிறியோர்கள் நிற்பார்—பின்னும்
பேர்பெற்ற ராஜாக்கள், பிரஜைகள் நிற்பார்.— இயேசு

7

சுவாமிக ளனந்தம்பேர் நிற்பார்—ஜெக
கோத்திர ஏமாற்றக் குருக்களும் நிற்பார்,
மக்கள் மனிதர்கள் நிற்பார்—மற்றும்
பக்தஜனங்கள் பல தேசத்தார் நிற்பார்.— இயேசு

8

எக்காளம் சத்தமாய்த் தொனிப்பார்—ஒரு
நொடியினில் மரித்தோர்கள் உயிரோடே வருவார்,
பாவத்திற் செத்தோர்கள் விழிப்பார்—பரி
தாப நிலைமையில் நின்று தவிப்பார்.— இயேசு
பக்தர்கள் பலகோடி நிற்பார்—பரி
சுத்தர்க ளனந்தம்பேர் சந்தோஷங் கொள்வார்.— இயேசு
தாமதஞ் செய்யாதே ஐயா—வேத
நாயகன் சொல்வது மெய்யென்று ஏற்பாய்.— இயேசு

V. D. Kailasam.

## JOY AND ADORATION

## இயேசுகிறிஸ்து மனுக்குலத்துக்காகச் செய்த மகத்துவ செயல்களை நினைத்து பக்தன் ஆனந்தங்கொள்ளல்

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி

ஆ! ஆ! கேள் என்ன ஆனந்தம்—யேசு
அன்பனின் மகத்துவம்.

அநுபல்லவி

ஆ! ஆ! வானத்தின் தூதர் தேவானந்தன்
அழகிய மோட்சத்தின் பக்தர் சுகானந்தன்
அமலவனே றேவாடு மேகானந்தன்
அகிலத்தின் மனுவாயுதித்த தேவானந்தன்.— ஆ! ஆ! கேள்

1

ஆதியில் தேவனின் சப்தமா யிருந்து
அதிசய வான்புவி கொடியி லமைத்து
ஆதி மனுஷனை உருவாகப் பிடித்து
நாசியில் ஜீவ சுவாசத்தை வைத்து
நரர்களை யெங்கும் பரவிட வைத்து
நலமாக யாவையும் மனுவுக்கா யமைத்து
நாசமாய்ப் பாவத்தி லகப்பட்ட போது
நரர்வடி வமைந்த சச்சிதானந்தன்.— ஆ! ஆ! கேள்

2

வேதாளம் பெருமையால் வாதுகள் பண்ணி
சதியாக வோர்சமர் புரியவே யெண்ணி
சர்வ வல்லவரின் சமுகமே உன்னி
காந்தவர் மிகாவேல் கணங்களும் தோன்றி
கடுமையாய்ப் பதிவிசை தாக்கியே தள்ளி
புவியிடை மரண வுபாதையை நண்ணி
பாதாள மட்டுந் தொடர்ந்துமே சென்னி
பிடித்து வுடைத்த நித்தியானந்தன்.— ஆ! ஆ! கேள்

3

மரணத்தின் கட்டுக ளவிழ்த்துமே யுயிர்த்து
மாட்சிமை யான சரீரத்தை யெடுத்து
மறுபடி சீஷர்கள் மத்தியிலு தித்து
மகத்துவ னவர்கள் முன்பு புசித்து
மற்று மநேக புத்திக ளுரைத்து
மானிட ரவரையே நம்ப விதித்து
மகிமையாய் மேக வாகனம் பிடித்து
மன்னிய மேலோகஞ் சென்ற ஜீவானந்தன்.— ஆ! ஆ! கேள்

4

பிசாசினுல் விளைந்த தீமையைப் போக்கி
பாவங்கள் யாதொன்று மில்லாம லாக்கி
பாவிகள் பயங்க ளனைத்துமே நீக்கி
பரிசுத்த ஜீவியம் மனசிலே யாக்கி
பற்பல ஜாதியை ஒருமைப்பா டாக்கி
பாமுன் வந்திட இடமே யுண்டாக்கி
பட்சத்தாற் றம்முட னிருக்க வொன்ருக்கி
பார்த்திபனேடு வசிக்கும் விண்ணனந்தன்.— ஆ! ஆ! கேள்

5

சாட்சிக ளனந்தங் கோடிகள் கூட்டம்
சாட்சியாய் ரத்தஞ் சிந்தினேர் கூட்டம்
சுத்த வஸ்திரந் தரித்தவர் கூட்டம்
சூரிய வொளிபோற் மின்னுவர் கூட்டம்
சுற்றி நிற்கும் கற்புள்ளோர் கூட்டம்
சூதுவா தில்லாப் பாலகர் கூட்டம்
சுகுண குணமுள்ள மாதுகள் கூட்டம்
சகலமும் ஜொலிக்க வைக்கும் மோட்சானந்தன்.—
ஆ! ஆ! கேள்

6

தலையினிற் தங்கக் கிரீடமும் பூண்டு
வாயினி லானந்தப் பாட்டையுங் கொண்டு
கண்களி லானந்தக் காட்சியுங் கண்டு
கரங்களிற் வீணை வாத்தியங் கொண்டு
அங்கத்திற் சுத்த அங்கியும் பூண்டு
பாதத்தில் பாத ரட்சையும் பூண்டு
பளிங்கு நதியி னோரத்திற் நின்று
பாடிடுங் கும்பலை பார்க்கும் கருணானந்தன்.—ஆ! ஆ! கேள்

7

அல்பா வோமேகா வோசன்னாப் பாட்டு
ஆதியு மந்தமு மவரென்ற பாட்டு
ஆட்டுக் குட்டி மோசேயின் பாட்டு
அதிசய ரட்சிப்பி னானந்தப் பாட்டு
அவரவர் வாயினி லகந்தனிற் பாட்டு
அன்பர்க்கு யேசு ஈந்தபின் மீண்டு
அருளினாற் வேத நாயகன் பாட்டு
ஆசையாய்க் கேட்டு மகிழும் வேதானந்தன்.— ஆ! ஆ! கேள்

V. D. Kailasam.

## NOTICE
## விளம்பரம்

நீலகிரியிலும், சென்னையிலும், வேலூர் வட்டகையிலும், திருநெல்வேலியிலும் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள வேதாகம ஸ்திரீகள் இந்துக்களுக்குள் வேலைநடத்த தேவை.

30 வயது முதல் 40 வயது வரையுள்ள சுவிசேஷவேலையில் கருத்துக்கொண்டவர்கள் இந்த வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குப் பிரியமான இடத்தைக் குறிப்பிட்டு, சென்னை கனம் P. குரோவர் அம்மாளவர்களுக்குப் பின்வரும் மேல்விலாசம் போட்டுத் தெரியப்படுத்தலாம்: Miss P. Grover, C. E. Z. M. House, Vepery, Madras.

வேலை துவக்குமுன் யாருக்காவது இவ்வேலையில் பயிற்சி வேண்டுமென்று விரும்பி தெரியப்படுத்தினால் அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1921